www.maiam.com /maiamofficial
மக்கள் நீதி மய்யம்
PR-14/SS-01/27102021/T
27 அக்டோபர் 2021
சென்னை

# நம்மவரின் ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் ஃபோர்டு கார் நிறுவனப் பணியாளர் அமைப்பு

**27-10-2021**

**வணக்கம்,**

உலகப்புகழ் பெற்ற அமெரிக்க கார் நிறுவனமான ஃபோர்டு நிறுவனம், தனது உற்பத்திப் பிரிவை இந்தியாவில் சென்னையில் நிறுவி உற்பத்தி செய்துவந்தது. பின்னர் அதன் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, மேலும் ஒரு பிரிவை குஜராத்தில் தொடங்கியது. அதன்மூலம் தமிழகத்திலும் குஜராத்திலும் பல்லாயிரக்கணக்கானோர் வேலைவாய்ப்பு பெற்றிருந்தனர்.

இந்நிலையில், அந்நிறுவனம் தனது இந்திய யூனிட்டுகளை மூடுவதாக அறிவித்தது. பெரும் வேலை இழப்பை ஏற்படுத்தும் இந்த நடவடிக்கையை, நமது தலைவர் 'நம்மவர்' அவர்கள் கண்டித்துக் குரல்கொடுத்தார்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில், அந்நிறுவனப் பணியாளர்கள் நம்மவரைச் சந்தித்தனர். அவர்களிடம் நம்மவர் ஃபோர்டு நிறுவனத்தைத் தக்கவைக்க, தான் மேலும் முயல்வதாகக் கூறினார்.

ஊடகப்பிரிவு,
மக்கள் நீதி மய்யம்,
சென்னை.